

கலைஞர் 100
1924 - 2023

இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 89 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஐப்பசி 21 – செவ்வாய்க்கிழமை 07 நவம்பர் 2023 – கோவை ★ ★ 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 89 : Thiruvalluvar Year - 2054 - Ayppasi 21 - Tuesday 07 November 2023 - Kovai ★ ★ 8 Pages ₹ 5.00




சென்னை மண்டல வாக்குச்சாவடி பாக முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தினர்!

## ‘இந்தியா’ கூட்டணியின் வெற்றிக்காக - மக்களிடம்

# பா.ஜ.க.வின் உண்மை முகத்தை வெளிப்படுத்திடுவீர்!

### சென்னை மண்டல பாக முகவர்கள் கூட்டத்தில் முதல்வர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் உரை- அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாசித்தார்!

**திருவள்ளூர், நவ. 7 -**

**“இந்தியா” கூட்டணியின் வெற்றிக்காக மக்களிடம் பா.ஜ.க. வின் உண்மை முகத்தை வெளிப்படுத்துவீர்” என்று கழகத் தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டல வாக்குச் சாவடி பாக முகவர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் காணொலி மூலமாக உரையாற்றும்போது கூறினார். மு.க. ஸ்டாலின் அவர்களின் அவ்வுரையை கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அக் கூட்டத்தில் வாசித்தார்.**

கழகத்தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (5-11-2023) திருவள்ளூரில் நடைபெற்ற சென்னை மண்டல வாக்குச் சாவடி பாக முகவர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டத்தில் உடல்நிலை காரணமாகக் காணொலி மூலமாகக் கலந்துகொண்டு கீழ்க்காணுமாறு பேசினார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

அனைவருக்கும் வணக்கம்.

திடீரென்று காய்ச்சலும் தொண்டை வலியும் எனக்கு ஏற்பட்டுவிட்ட காரணத்தால் இந்த நிகழ்ச்சிக்கு நேரடியாக வந்து உங்களை எல்லாம் சந்தித்து உரையாற்றாமல் போனதற்காக நான் முதலில் என்னுடைய வருத்தத்தை மிகுந்த பணிவோடு உங்களுக்கெல்லாம் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கூட்டத்தை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கும் தனித்தனியாக சொல்ல வேண்டும் என்று ஆசை, ஆனால் தொண்டை சரியில்லை. ஒட்டுமொத்த அத்தனை பேருக்கும், இதில் உண்மையாக பாடுபட்டு பணியாற்றிய நம்முடைய கட்சி உடன்பிறப்புகள், சகோதரர்கள், நண்பர்கள், நிர்வாகிகள், பல்வேறு அணிகளைச் சார்ந்தவர்கள், மாவட்டச் செயலாளர்கள் எல்லாவற்றிற்கும் மேல் தலைவர் கலைஞர் அவர்களின் அன்பு உடன்பிறப்புகள் அத்தனை பேருக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை, வணக்கத்தை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் அங்கு வரவில்லை என்று சொன்னாலும் என்னுடைய நினைவுகள் எல்லாம் அங்கு என்ன நடந்து கொண்டிருக்கிறது... எப்படி சென்று கொண்டிருக்கிறது என்றுதான் என்னுடைய சிந்தனை எல்லாம் இருந்தது. தொடர்ந்து விசாரித்துக் கொண்டிருந்தேன். அதனால் நீங்கள் யாரும் என்னைத் தவறாக நினைத்துக் கொள்ள மாட்டீர்கள் என்று கருதுகிறேன். அதிகம் பேசக் கூடாது என்று மருத்துவர்கள் கட்டாயப்படுத்தி இருக்கிறார்கள். அதை எல்லாம் மீறி வந்து இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறேன். இப்போது என்னுடைய பேச்சைச் சுருக்கமாக தம்பி உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.




கழகத் தலைவரும், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (05.11.2023) திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற, சென்னை மண்டல கழக வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சி பாசறைக் கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக உரையாடினார். முதலமைச்சர் அவர்களது அவ்வுரையை, கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வாசித்தார். இந்நிகழ்ச்சியில், கழக பொருளாளரும், நாடாளுமன்ற குழுத் தலைவருமான டி.ஆர். பாலு, கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சருமான கே.என். நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, துணை அமைப்புச் செயலாளர்கள் தாயகம் கவி, ஆஸ்டின், அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற இந்நாள், முன்னாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழகச் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

**உதயநிதி ஸ்டாலின் பேச்சு!**

நிகழ்வில் கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் படித்த கழகத் தலைவர் அவர்களின் உரை பின் வருமாறு:-

காத்திருக்கும் நாடாளுமன்றக் களத்தில், கனிந்து வரும் வெற்றிக் கனியைப் பறிக்க - விளைந்து நிற்கும் வெற்றியை வீடு சேர்க்க -நாடாளுமன்றத் தேர்தல் பணிக்கான தொடக்கப்புள்ளியான இந்த வாக்குச் சாவடி பொறுப்பாளர்கள் கூட்டம், திருச்சி - இராமநாதபுரம் - திருப்பூர் - திருவண்ணாமலையைத் தொடர்ந்து, இன்று திருவள்ளூரில் நடைபெறுகிறது.

## ரெய்டு மிரட்டல்களுக்கெல்லாம் தி.மு.க. பயப்படாது

இந்த மாநாட்டை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்துள்ளார் ராணிப்பேட்டை காந்தி அவர்கள். ராணிப்பேட்டை காந்தி அவர்களை திருவள்ளூர் காந்தி என்றே இன்றைக்கு சொல்லலாம். அந்தளவிற்கு இங்கேயே இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறார்.

**சிறப்பாகச் செயல்படும் அமைச்சர் காந்தி!**

காந்தி அவர்களிடம் ஒரு பணியைக் கொடுத்தால், அதைச் சிறப்பாகத்தான் செய்வார். இதனை இன்று நேற்றல்ல, பல ஆண்டுகளாகப் பார்த்து பாராட்டிக்கொண்டு வருகிறேன். அவர் மனதில் பட்டதை பட்டென்று சொல்வார்; என் மனதில் நினைப்பதை சட்டென்று செய்வார். அது தான் காந்தி! அவருக்கு உறுதுணையாக இருந்த திருவள்ளூர் மாவட்டக் கழகச் செயலாளர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் பாராட்டுகள்! வாழ்த்துகள்.

இன்று காலை முதல்,

* ‘வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்களின் கடமைகளும் பணிகளும்’ என்ற தலைப்பில், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ அவர்களும்,

* ‘வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணிகள் மற்றும் அதன் முக்கியத்துவம்’ குறித்து, செயல்வீரர் தா.மோ. அன்பரசன் அவர்களும்,

* ‘சமூக வலைத்தளங்களின் பயன்பாடு, செயல்படுத்த வேண்டிய முறைகள்’ குறித்து, திராவிட இயக்க எழுத்தாளர் சகோதரர் லெனின் அவர்களும்,

* கழகத்தின் வரலாறு, அடிப்படைக் கொள்கைகள், திராவிட இயக்கத்தின் கோட்பாடுகள், நவீன தமிழ்நாட்டை உருவாக்க நாம் எடுத்த முயற்சிகள், திராவிட மாடல் ஆட்சி ஆகியவை குறித்து,

நாடாளுமன்ற உறுப்பினர் சகோதரி தமிழச்சி தங்கபாண்டியன் அவர்களும், எதார்த்த பேச்சாளர் - திராவிடப் பற்றாளர் இயக்குநர் கரு.பழனியப்பன் அவர்களும் என காலை முதல் இவர்கள் மூலமாக கொள்கை வழிகாட்டுதலும், தேர்தல் பயிற்சியும் வழங்கப்பட்டிருக்கிறது.

இவையெல்லாம் இந்தத் தேர்தலுக்கு மட்டுமல்ல, எல்லாத் தேர்தலுக்கும் பயன்படும். இது எல்லாவற்றையும் மனதில் வைத்து நீங்கள் செயல்பட வேண்டும்.

**மாவட்டக் கழகச் செயலாளர்களுக்குப் பாராட்டு!**

இன்று 11 மாவட்டக் கழகங்களில் இருந்து, 11 ஆயிரத்து 569 பேர், ஆற்றல்மிகு மாவட்டக் கழகச் செயலாளர்களால் அழைத்து வரப்பட்டுள்ளீர்கள். இதனை ஒருங்கிணைத்த,

* திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் சா.மு.நாசர்

* திருவள்ளூர் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன்

* திருவள்ளூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.சந்திரன்

* சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்